# பயங்கரவாதத்தை ஒழிக்க சகல உதவிகளையும் பாகிஸ்தான் வழங்குமென ஸியாஉல் அறிவிப்பு

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 16-12-85 திங்கள் (மார்சழி 1 ரபியு ஆகிர் 3) முழக்கம் 311

(கொழும்பு)

இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு எடுக்கப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் பாகிஸ்தான் நல்லதொரு நண்பனுக நின்று இலங்கைக்குச் சகல உதவிகளையும் வழங்குமென்று இங்கு விஜயம் செய்த பாகிஸ்தான் ஜனுதிபதி ஸியாஉல்ஹக் நேற்றுக்காலை செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். ஐந்து நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பு முன்னர் செய்தியாளர் மாநாட்டை ஜனுதிபதி நடத்தினுர். "பாகிஸ்தான் ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நாடாகவிருந்தால் மேலும் பல உதவிகளை அதனுல் செய்யக்கூடியதாக இருந்திருக்குமெனவும்" அவர் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். ஒரு நாட்டிலுள்ள உள்நாட்டுச் சக்திகள் அந்த நாட்டுக்கு அழிவை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டால் அதனை எந்தவொரு நாடும் அனுமதிக்கக்கூடாதெனவும் ஜனுதிபதி ஸியாஉல் ஹக் சுட்டிக்காட்டினுர். கடந்த சில வருடங்களாக இந்திய அரசாங்கத்துடன் பாகிஸ்தான் சிநேகபூர்வமான உறவை வளர்த்துவந்துள்ளது என்றும் சொன்ன ஜனுதிபதி, அயலநாடுகள் எதுவாகவிருந்தாலும் பயங்கரவாதத்தில் ஈடுபடுபவர்களுக்கு உதவக்கூடாது எனவும் தெரிவித்தார்.

★★ பிந்திக் கிடைத்த பிரத்தியேகச் செய்தி!

# கூட்டணியினரின் யோசனைக்கு இலங்கை அரசின் பதில் என்ன?

## டில்லியிலுள்ள இலங்கை தூதரகம் ஊடாக இந்திய அரசு அறிக்கை கோரியுள்ளது

(கொழும்பு)

இலங்கை அரசின் இனப்பிரச்சினைத் தீர்வு யோசனைக்கு மாற்று யோசனையாக, தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சமர்ப்பித்த திட்டம் சம்பந்தமாக இலங்கை அரசின் நிலைப்பாட்டை தாமதமின்றி அறிவதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு எடுத்துள்ளதாக நேற்றிரவு பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதரகம் ஊடாகவே இவ் அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் இவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தூதுவர் திரு. பெர்னுட் திலகரத்தின இது தொடர்பாக நேற்று இலங்கை உயர் பீடங்களுடன் தொடர்பு கொண்டதாகவும் தெரியவந்துள்ளது.

வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு மாநில அமைப்பை உரு

...6 ம் பக்கம் பார்க்க

## இலங்கையருக்கு மரணதண்டனை

எகிப்தில் போதைவஸ்து கடத்திய இலங்கையருக்கு

... 6ம் பக்கம் பார்க்க

## கோட்டையருகே பரபரப்பு குண்டுக்கு ஒருவர் பலியானுர்

(வண்ணுர்பண்ணை)

யாழ். கோட்டையிலுள்ள ஆயுதப்படையினர் நேற்று மாலை வெளியே வந்து அப்பகுதியிலுள்ள பற்றைகளுக்குள் மறைந்திருந்ததாகக் கூறப்படுகின்றது இதனையடுத்து அயல் பகுதிகளில் குண்டுகள் வெடிக்கவைக்கப்பட்டன. படையினரும் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து நகரில் நிறுத்தப்பட்ட வாகனங்கள் ஓடிமறைந்தன. திறந்திருந்த சில கடைகளும் மூடப்பட்டன.

குண்டுகளை வீசிய இளைஞரில் ஒருவர் தவறுதலாக குண்டு வெடித்து மரணமான

.. 6 ம் பக்கம் பார்க்க

## ராணுவம் சுட்டு கணவன் பலி மனைவி அழுதழுது மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆரும் வாய்க்கால் கண்ணிவெடி சம்பவத்தின் போது ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவரின் இறுதி கிரியைகளின் போது அவரின் மனைவியும் மரணமானுர்.

கடந்த 11ம் திகதி புதன் கிழமை வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது ஆயுதப்

..6 ம் பக்கம் பார்க்க

## தமிழாசிரியர்கள் இருவர் ஹபரண பொலிசால் கைது

(திருமலை)

யாழ்ப்பாணத்திலிருந்து திருமலை சென்ற இரண்டு ஆசிரியர்கள் ஹபரண பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இராஜரத்தினம் சச்சிதானந்தம், மார்க்கண்டு சிவபாதசுந்தரம் ஆகிய இருவருமே கைதான ஆசிரியர்களாவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற இவர்கள் ஹபரண

...6ம் பக்கம் பார்க்க

## வங்கி மறியல் போராட்டம் இன்று நடைபெறமாட்டாது

முன்னர் அறிவிக்கப்பட்டவாறு இன்று திங்கட்கிழமை முதல் மக்கள் வங்கிகள் முன்பாக நடைபெறவிருந்த மறியல் போராட்டம் சில காரணங்களை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அடகு வைத்தோர் சங்கம் அறிவித்துள்ளது.

கண்காணிப்புக் குழுவுடன் தொடர்பு கொண்டதற்கிணங்க அவர்கள் இது பற்றி நடவடிக்கை எடுப்பதற்காக சில அவகாசம் கேட்டுள்ளமை, பேராசிரியர் சிவத்தம்பி இது

... 6ம் பக்கம் பார்க்க

நேற்றைய கருத்தரங்கில் இரு பகுதிக் கருத்து

## தனியார் மருத்துவக் கல்லூரி வேண்டுமா? வேண்டாமா?

(அலுவலக நிருபர் இ. பாரதி)

வட இலங்கைத் தனியார் மருத்துவக்கல்லூரி சம்பந்தமாக நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில், சில சீர் திருத்தங்களுடன் இதனைத் தொடர்ந்து இயங்க அனுமதிக்கலாமென்றும், இக்கல்லூரியை முற்றுக மூடிவிட வேண்டும் என்றும் இரு தரப்புக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

தேசிய மாணவர் மன்றம் இக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது.

"எமது தேச விடுதலைக்கும் சோஷலிச நிர்மாணத்திற்கும் 'தனியார் மருத்துவக்கல்லூரி'

...6ம் பக்கம் பார்க்க

## கட்டைபறிச்சானில் 15 வீடுகள் தீக்கிரை; திருமலையில் நேற்றும் இளைஞர்கள் கைது!

(திருமலை)

கட்டைபறிச்சான் கிராமத்துக்கு சென்ற சீருடையினர் கைமுண்டான்குளம் பகுதியில் பதினைந்து வீடுகளைத் தீக்கிரையாக்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளின் குடியிருப்பாளர்கள் அயல் கிராமங்களுக்குச் சென்றுள்ளனர். மல்லிகைத்தீவில் பொன்னம்பலம் என்பவரும், செல்வநாயகபுரத்தில் அருமைத்துரை என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்,

மூதூர் பள்ளிக்குடியிருப்புக் கிராமத்தில் ஊர்காவற்படையினரும் சீருடையினரும் சேர்ந்து பல வீடுகளை எரித்த

. 6ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் இப்படிச் சொல்கிருர்

(திவுலுப்பிட்டிய)

"தீவிரவாதிகள் எத்தகைய முட்டுக்கட்டையை ஏற்படுத்தினுலும் யாழ்ப்பாணத்திற்கான ரயில் சேவை தொடர்ந்து நடைபெறும்" என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியுள்ளார்.

## 1796 என்பது 1976 ஆக மாறி மாணவரைத் திணறடித்தது

(புங்குடுதீவு)

வினுத்தாள் ஒன்றில் கொடுக்கப்பட்டிருந்த பந்தியொன்றில் இடம்பெற்றிருந்த இலக்கப் பிழையினுல் பரீட்சார்த்திகள் பெரும் மயக்கத்துக்கு உள்ளானுர்கள்.

கடந்த வியாழக்கிழமை காலை க. பொ. த. ப. சாதாரணதரப் பரீட்சைக்கான சமூகக் கல்வி (2) வினுத்தாளிலேயே இத்தவறு காணப்பட்டது.

"1976-ம் ஆண்டில் கொழும்புக் கோட்டையும் ஒல்லாந்தருக்கு உரித்தாயிருந்த ஏனைய பிரதேசங்களும்..." என்று இவ்வினுத்தாளில் குறிப்பிடப்பட்டிருந்தது. 1796ஆம் ஆண்டில் என்றிருக்க வேண்டிய பகுதியே இவ்வாறு இலக்கம்

...6 ம் பக்கம் பார்க்க

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் ஈழமுரசு

## பரிவிளம்பரம்

### தவறிவிட்டது

52?570230 V இலக்கமுடைய அடையாள அட்டை கந்தசாமி யோதீஸ்வரன் என்பவருடையது. கண்டெடுத்தவர்கள் ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

### மணமகள் தேவை

யாழ்ப்பாண உயர் வேளாள குல வெளிநாட்டு பொறியியல் கல்லூரியில் பொறியியல் விரிவுரையாளராக பணிபுரியும் ரேவதி நட்சத்திரம், அழகும் குணமுமுள்ள மணமகளுக்கு 30 வயதிற்கு குறைந்த பொருத்தமான டாக்டர்/ பொறியியலாளர் / கணக்காளர் மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படுகின்றது. விபரங்கள் இரகசியமாக வைத்திருக்கப்படும். குடும்ப, சீதன விபரங்களுடன் சாதகக் குறிப்பை அனுப்பவும்.

விளம்பர இல: B/936 மே/பா. ஈழமுரசு 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

### தவறிவிட்டது

68?080299 V இலக்கமுடைய அடையாள அட்டை தொலைந்துவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். து. யோகேந்திரன் 2 A, செல்லர் வீதி, நல்லூர்.

### உங்களுடையதா?

பின்வருவோர் தவறவிட்ட பொருட்கள் ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (1) திரவியம் ஜோஜ் பிறின்சிலி, 843/2, சின்னக்கடை, மன்னார் மேற்கு (2) பிலிபா ஜோசப் அன்டன் யோகராஜன், 108/5, பெல்மன் வீதி, அழுத்கடை (3) கதிர்த்தம்பி முத்துக்குமாரு, 2, டறியற்சாலை வீதி, பதுளை.

## சித்தி

(சரசாலை)

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் இவ்வருடம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்று மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவர் ஒருவரும் சித்திபெற்றுள்ளார்.

## மாவையில் திருவெம்பாவை

(காங்கேசன்துறை)

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலின் திருவெம்பாவை உற்சவங்கள் புதன்கிழமை ஆரம்பமாகி 27-ம் திகதி வெள்ளிக்கிழமை உதயம் ஆர்த்திராதரிசன விழாவுடன் பூர்த்தியடையும். இம்முறை முதன் முதலாக ஒன்பதாம் நாளான 26-ம் திகதி வியாழக்கிழமை காலை சிதம்பரிசமேத சிதம்பரேஸ்வரர் புதிய சித்திரத் தேரில் ஆரோகணித்துவர ஏற்பாடாகியிருக்கிறது. இங்குள்ள நடேசப்பெருமானும் அம்பாளும் சிதம்பரத்திலிருந்து உருவகம்செய்து 1966ம் ஆண்டளவில் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது. பாணுசுரனும் பண்டாசுரனும் முறையே மத்தளமும், சல்லரியும் வாசித்துக்கொண்டிருக்கும் அமைப்பு இந்த மூர்த்தியில் நிர்மாணிக்கப்பட்டிருப்பது இங்குள்ள ஓர் புதுமையாகும்.

## மிருசுவிலில் ஆரம்ப சுகாதார நிலையம்

நேற்று முன்தினம் மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்தில் வைத்திய கலாநிதி எஸ். ஞானசம்பந்தன் அவர்களால் ஆரம்ப சுகாதார நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. திட்டப் பொறுப்பதிகாரி திருமதி கே. சந்திரதேவா இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

## பழம் ரோட் விநாயகர் பூஜை

கந்தர்மடம் பழம் ரோட், ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் கணபதி ஹோமம் விநாயக ஷஷ்டி விரதத்தையும் முன்னிட்டு செவ்வாய் காலை ஐந்து மணிக்கு கும்ப பூஜையும், 7-30 மணிக்கு அபிஷேகமும், ஒன்பது மணிக்கு தீபாராதனையும் பஞ்சமுகார்ச்சனையும் நடைபெறும்.

## கஜமுகாசூரன் போர் இன்று

வல்வெட்டித்துறை திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் கஜமுகாசூரன் போர் இன்று மாலை நான்கு மணிக்கு நடைபெறும்.

## விக்ரோறியா இணைச்சாம்பியன்

(சுழிபுரம்)

மாவட்டச் சாம்பியன் போட்டியில் கலந்துகொண்ட சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி யாழ். சென் ஜேம்ஸ் கல்லூரியுடன் மோதி, தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டு இணைச்சாம்பியனானது.

பதினைந்து வயதிற்குட்பட்டோர் போட்டியில் கடந்த 81ம் ஆண்டு வெற்றிபெற்ற விக்ரோறியா அண்மைய ஆண்டுகளில் போட்டி நடைபெறுமையால் இம்முறை போட்டியிட்டு வென்றிருக்கிறது.

ஏற்கனவே தெல்லிப்பளை மகாஜன, கொக்குவில் இந்து, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா, ஆகியவற்றை விக்ரோறியா தோற்கடித்திருந்தது.

சென் ஜேம்ஸுடன் நடைபெற்ற போட்டியை அடுத்து நடைபெற்ற வைபவத்தில் பிரதம கல்வி அதிகாரி திரு. ஆர். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசுக் கேடயத்தை வழங்கினார்.

போட்டி கல்வியுத்தியோகத்தர் திரு. எஸ். தங்கராஜா தலைமையில் நடந்தது. போட்டிக்குரிய ஆயத்தங்களை திரு. கணேசலிங்கம் கவனித்தார்.

## ஊக்குவிப்பு நடவடிக்கை

(புலோலி)

பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதி வீடுகளில் பயன்தரு மரங்களை நாட்டுவதன் பொருட்டு மக்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதிகளின் கமநலச்சேவை நிலையங்களின் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. வீ. இராசையா மேற்கொண்டுள்ளார்.

பருத்தித்துறை. உடுப்பிட்டித் தொகுதிகளின் கமநலச் சேவை நிலையங்களினூடாகத் தற்பொழுதுமக்களுக்குநல்லின தென்னங்கன்று, மாங்கன்று, தோடங்கன்று, தேசிக்கன்று போன்ற பயன்தரு மரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இப்பயன்தரு மரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் அவ்வப்பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளலாமென்றும் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. இராசையா அறிவித்துள்ளார்.


### சவுதி அரேபியாவில்

றைவர், மெக்கானிக், எலக்றிசன், லேபரஸ், ஸ்ப்போவசியர் ஆகிய வேலைதேடிச் செல்வோர் தொடர்பு கொள்ளவும்.

அலங்கார் ஏஜென்சீஸ்
5, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.
(கடவுச் சீட்டு, BOND ஆகியவை செய்துகொடுக்கப்படும்)

### "தொழிற் பயிற்சி"

உடன் வேலைவாய்ப்புபெற அரிய சந்தர்ப்பம்

- ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங் சகல இன ரெலிவிசன் டெக் திருத்தும் முறை செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்
- Computer Programming Basic - Cobol பயிற்சியளிக்கப்படும்
- எலக்ரிக்கல் வயறிங்
- வெல்டிங்
- Diploma In Draughtsmanship
- மோட்டார் றீவைண்டிங், மோட்டர் ரான்ஸ்போமர் வேறு மின்சார பொருட்களும் றீவைண்டிங் பயிற்சியளிக்கப்படும்.

பயிற்சிகள் ஆரம்பம்: 24.12.85

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை யருகாமை) யாழ்ப்பாணம்.

விக்கினேஸ்வராக் கல்லூரி வீதி, பெற்றோல் செற் முன்வீதி, நெல்லியடி, கரவெட்டி.

141, கண்டி வீதி, (யூனியன் பேக்கரி யருகாமை) சாவகச்சேரி.


## பிறந்தநாள் வாழ்த்து

- சித்தங்கேணி டச்ரோட், குலசிங்கம் - நீலாவதி தம்பதியின் மகள் மதனிகா முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
- உடுவில் தெற்கு, லோகேஸ்வரன் - பூமணிதேவி தம்பதியின் மகள் சுபாஜினி முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
- குருநகர் மத்தியாஸ் ராசு- யோகராணி தம்பதியின் மகன் ஐசாக் நியூட்டன் முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
- யாழ். பீச்ரோட் பொனவெஞ்சர் - பிறீப்ரேஸ் தம்பதியின் மகள் அகன்யா இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
- யாழ். ஸ்ரீ கதிரேசன் கோவில், பிரம்மஸ்ரீ நாராயணக்குருக்கள் - கலபனுகௌரி தம்பதியின் மகன் கிஷ்ண மோகன் இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
- இணுவில் மேற்கு, வன்னியசிங்கம் - ஜெயலட்சுமி தம்பதியின் மகன் சுகிர்தன் இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
- திருநெல்வேலி தெற்கு, குகனேஸ்வரன் - கலாநிதி தம்பதியின் மகன் செந்தூரன் இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
- யழ். நாவலர் வீதி, ஆனந்தநடராஜா - செல்வநாயகி தம்பதியின் மகள் வினோஜினி மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
- குருநகர் அடம்பன் வீதி, அடைக்கலமுத்து - எலிசபெத்தம்மா தம்பதியின் மகன் மங்களதாஸன் நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
- கிளிநொச்சி, திருநகர் கோபாலகிருஷ்ணன் - சரஸ்வதி தம்பதியின் மகன் சுதாகரன் ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
- சித்தங்கேணி, செல்வரஞ்சிதன் - சரோஜினிதேவி தம்பதியின் மகள் சஞ்சுளா ஆறுவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
- யாழ்ப்பாணம், சாம்பசிவம் - சரோஜினிதேவி தம்பதியின் மகன் தனுசன் ஏழாவது பிறத்தநாளைக் கொண்டாடுகிறார்.
- வயாவிளான் - பலாலி தெற்கு துரைராஜா - இராஜேஸ்வரி தம்பதியின் சிரேஷ்ட புதல்வி கிரிஜா இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## அனலைதீவு ச. ச. நிலைய நிர்வாகஸ்தர்

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு வடலூர் சன சமூக நிலையப் புனரமைப்புக் கூட்டம் திரு. பொ. பரராஜசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. பொ. பரராஜசுந்தரம், உப-தலைவர்: செல்வன் வி. குகானந்தன், செயலாளர்: செல்வன் த. ராஜானந்தன், உப-செயலாளர் : செல்வன் மா. சிவஞானசுந்தரம், பொருளாளர்: செல்வன் சி. செந்தமிழரசன்.

அறுவர் கொண்ட செயற்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

## மூன்றுவது நினைவஞ்சலி

### திருமதி திலகம் கந்தையா



மலர்வு: 29-3-1945 மட்டுவில்

உதிர்வு: 16-12-1982 கொம்பனித்தெரு

திதி 16-12-1985

நித்திலம் சன்னதிரோட், தம்பாலை, அச்சுவேலி.

கணவன், பிள்ளைகள்.

# குருநகர் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம்

(குருநகர்)

"இவ்வாறான புலமைப் பரிசில் திட்டங்களைக் கிராமங்கள் தோறும் உருவாக்கி செயல்படுத்தப்பட்டு வருவது பாராட்டக்கூடிய ஒன்றாகும். அதற்காகக் குருநகர் மக்கள் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்திற்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டியவர்களாகும். இந்தத் திட்டத்தை நல்ல முறையில் குருநகர் பகுதி மாணவர்கள் பயன்படுத்தி கல்வி அறிவுடைய ஒரு புதிய சமுதாயத்தை கட்டி எழுப்புதல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ள குருநகர்ப் பகுதி மாணவ மாணவிகளுக்கான புலமைப் பரிசில் திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக குருநகர் சென். ஜேம்ஸ் ஆண்கள், பெண்கள் பாடசாலைகளில் மு மை மாணவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களை வழங்கிக் கௌரவித்த வைபவம் குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற போது பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பங்குத் தந்தை அருட்திரு. பீற்றர் துரைரெட்ணம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். வைபவம் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. சி. தவரெட்ணம் தலைமையில் நடைபெற்றது.

தலைமையுரையில், திரு சி. தவரெட்ணம் பேசியதாவது: "இப்புலமைப் பரிசில் திட்டம் குருநகர் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் சங்கம் கூடுதல் அக்கறை கொண்டதன் காரணத்தால் ஏற்பட்டது" என்றார்.

சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபர்: திரு. அ ஸ்ரனிஸ்லோஸ் பேசுகையில்: "மாணவர்கள் வீட்டில் இருந்து தமக்குரிய பாடங்களை நாளாந்தம் திரும்பப் படிப்பதற்கு பெற்றோர் ஊக்கம் கொடுப்பதுடன் அவர்களது பழக்கவழக்கங்கள் பற்றியும் கண்ணோட்டமாக இருக்கல் வேண்டும்" என்றார். சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபரும் வைபவத்தில் உரை நிகழ்த்தினார். பரிசளிப்பு வைபவத்தைத் தொடர்ந்து மாணவ, மாணவிகளின் பல்சுவைக் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

வேலணை வித்தியாலய விழாவில் அறிவுரை:

# காலத்தால் அழியாத பெரும் செல்வம் கல்வி என்பதை மக்கள் உணரவேண்டும்

(வேலணை நிருபர் கே. வி. கே. ஜெயச்சந்திரமூர்த்தி)

"வடபகுதியில் உள்ள பிரபலமான தெரிவுசெய்யப்பட்ட கல்லூரிகளில் ஒன்றாக இக்கல்லூரி அமைந்துள்ளதையிட்டு நாமெல்லோரும் பெருமை கொள்ளாமல் இருக்க முடியாது. இப்பெருமைக்கெல்லாம் காரணம் காலம்தோறும் இங்கு திறமையாக நிர்வாகங்களை நடாத்திவரும் அதிபர்களும் சக ஆசிரியர்களுமே. தீவுப்பகுதி மாணவர்களின் முதன்மைமிக்க கல்லூரியாகவும், ஆண், பெண் விடுதிகளுடன் அமைந்துள்ளதும் சாலச் சிறந்ததாகும்.

மேற்கண்டவாறு வடபகுதியில் பிரபல்யம் மிக்க கல்லூரிகளில் ஒன்றாகத் திகழும் வேலணை மத்திய கல்லூரி என அழைக்கப்படும் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய பட்டயக் கணக்காளர் திரு. இ. வி. தளையசிங்கம் குறிப்பிட்டார்.

மேற்படி மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு.சிவராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் பரிசு பெற்ற மாணவ மாணவிகளுக்கு திருமதி விமலா தளையசிங்கம் பரிசில்களை வழங்கினார்.

இவ்விழாவில் திரு. இ. வி. தளையசிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில்: காலத்தால் அழிக்கமுடியாத அரும் பெரும் சிறப்புவாய்ந்தது கல்வி ஒன்றே கல்வியைச் சீராக கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டு கல்விக் களஞ்சியமாகத் திகழும் இக் கல்லூரி தீவுப்பகுதி மாணவர்களுக்கு மட்டுமல்லாது. வடபகுதி மாணவர்கள் சகலருக்கு மானதாகும் என்றார்.

கல்லூரி அதிபர் திரு.சிவராசசிங்கம் தனது உரையை அறிக்கையாகச் சமர்ப்பித்த பின் பேசும் போது" வடமாகாணத்திலே புகழ்மிக்கதாகத் திகழும் இக் கல்லூரி கல்வியில் மட்டுமல்லாது சமய, சமூக, சாரண மற்றும் விளையாட்டுத்துறையிலும் முன்னணியில் விளங்குகின்றது. இக்கல்லூரியில் கற்ற பலர் பெரும் அறிஞர்களாகவும், கௌவரவம்மிக்கவர்களாகவும் நாட்டின் பல பாகங்களிலும் வாழ்கின்றார்கள். கடந்த கால சம்பவங்களினால் இக் கல்லூரியின் கல்வி நிலை மந்த கதியில் இருந்து வந்தாலும் தற்போது வெகு சிறப்பாக இயங்கி வருகின்றது. தற்போது இக் கல்லூரிக்கு ஆசிரியர் பற்றாக் குறை நிலவுகின்றது. ஆசிரியர்கள் பலர் இக்கல்லூரிக்கு தேவைப்படுகின்றார்கள்.

மற்றும் ஆசிரியர்கள் பலரும் உரையாற்றினர். மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளுடன் விழா இனிது நிறைவேறியது.

## சேவைக்கால பயிற்சிவகுப்பு

(நல்லூர்)

சித்திரம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு இன்று 16ம் திகதி தொடக்கம் 20ம் திகதி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

பாடசாலையிலும், கல்லூரிகளிலும் சித்திரம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இச்சேவைக் காலப் பயிற்சி வகுப்பில் சலந்து கொள்ள வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர்.

பயிற்சியில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு சகாயப் பணக் கொடுப்பனவு செய்யப்படும் என்றும், பயிற்சியில பங்குபற்றும் ஆசிரியர்கள் வட்டாரக்கல்வி அதிகாரி (சித்திரம்) திரு. ஆ. தம்பித்துரை குரும்பசிட்டி, தெல்லிப்பளை என்ற விலாசத்திற்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படியும் தெரிவிக்கப் பட்டுள்ளது

## அகதிகளுக்கு முட்டை அன்பளிப்பு

(நல்லூர்)

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனப் பேராயர் பேரருட் திரு. டி. யே. அம்பலவாணர் ஆண்டகை நல்லூரில்இயங்கும் மகளிர் பேரவை அகதிகள் முகாமுக்கும், சங்கிலியன் அகதிகள் முகாமுக்கும் ஆயிரம் முட்டைகளை அன்பளிப்பாக வழங்கினார்.

நல்லூர் பரி. யாக்கோபு ஆலய வாலிபர் சங்கப் பிரதிநிதி முட்டைகளை முகாம்களுக்குக் கொண்டு சென்று முகாம் பொறுப்பாளர்களிடம் கையளித்தார்.

# தொழிற்பயிற்சி மூலம் சுயதொழில் வேலை வாய்ப்புப் பெறமுடியும்

(கொடிகாமம்)

"இன்று படித்துவிட்டுப் பல்கலைக் கழகம் செல்ல முடியாத நிலையிலுள்ள மாணவர்களுக்கும் சாதாரண பரீட்சைகளில் சித்தியடைந்துவிட்டு உயர் கல்விபெற முடியாதுள்ளவர்களுக்கும் இவ்வாறான பகுதி நேர தொழிற் பயிற்சி பெரிதும் கைகொடுத்துதவுகின்றது. அதுமட்டுமல்லாமல் தாம் கற்ற தொழிற்பயிற்சி மூலம் சுயதொழில் வேலை வாய்ப்பை பெற்று பெரும் ஊதியத்தைப் பெற்று தம் வாழ்க்கையைச் செவ்வனே நடத்தவும் முடிகின்றது.

இவ்வீட்டு மின் இணைப்பு பயிற்சி நெறியினை நடாத்துவதற்கு சாவகச்சேரி கல்வி வட்டாரத்திலேயே இப்பாடசாலை ஒன்றுதான் கல்வி அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இது எம் எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்கும ஒரு செய்தியாகும்." இவ்வாறு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் முதல் முதல் வீட்டு மின் இணைப்பு பத்துமாத தொழில் நுட்பப் பயிற்சி வகுப்பில் பங்குபற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்திற்கு தலைமைதாங்கி உரையாற்றிய மேற்படி பாடசாலை அதிபர் திரு. க. பேரம்பலம் குறிப்பிட்டார்.

வீட்டுமின் இணைப்பு பயிற்சி நெறி விரிவுரையாளர் ஏ ரி. அரியநாயகம் மற்றும் மாணவர் பிரதிகள் உட்பட பலர் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

இணுவை பெரிய சந்நியாசியார்

# முத்தமிழ் வளர்ச்சிக்கென ஆற்றிய பணி அளப்பரியது

(நீர்வேலி)

"பெரிய சந்நியாசியார் அவர்கள் தமிழும், சைவமும் தழைத்தோங்க பணி பல புரிந்த பெரியார்கள் எனப் போற்றப்படுவோரில் ஒருவர். இவர் ஓர் தீர்க்கதரிசி. ஒழுக்கம் தான் உயிரிலும் மேலானது என எடுத்துரைத்த இந்த இணுவையப்பர் பெரிய சந்நியாசியார் தமிழ், இயல், இசை, கூத்து, உரைநடை ஆகியன பொருள்பட சகலருக்கும் விளங்கும் விதத்தில் உரையாற்றி முத்தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்."

இவ்வாறு இணுவில் இளம் தொண்டர் சபை, விவேகானந்தா சனசமூக நிலையம் ஆகியன இணுவில் நற்பணி மன்றத்துடன் இணைந்து நடாத்திய பெரியார் இணுவையப்பர் பெரிய சந்நியாசியார் நினைவு தின விழா, திருவுருவப் படச் சுற்றுலா என்பவற்றிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் இளம் தொண்டர் சபைத் தலைவர் திரு. அ. சண்முகலிங்கம் குறிப்பிட்டார்.

இணுவில் மஞ்சத்தடியில் வைத்து இளம் தொண்டர் சபையால் பூஜிக்கப்பட்ட இத் திருவுருவப் படம் இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. ஊர்வலம் சென்ற பாதையில் மக்கள் பூரண கும்பமிட்டு வழிபட்டனர்.

இளம் தொண்டர் சபையின் தலைமைப் பணிமனையில் பெரியாரின் உருவப்படம் ஒன்றும், திரு. சபா. ஆனந்தரால் திரை நீக்கம் செய்யப்பட்டது.

இவ் வைபவத்தில் தொடர்ந்து பேசிய திரு. அ. சண்முகலிங்கம், "இப் பெரியார் கலையுலகு உவக்கும் 'இணுவை மஞ்சம்' ஒன்றை உருவாக்கினார். இவர் செய்த பணிகளாலேதான் இணுவில் ஆத்மீக வளர்ச்சியில் பெருமை பெற்று வருகிறது. ஆகவே நாமும் இனி வரும் சமுதாயமும் இவர் வழி நின்று வாழ்வில் பெருமை பெறுவோம்" என்றும் கூறினார்.

இவ் விழாவில் பண்டிதர் திரு ச. வே. பஞ்சாட்சரம் ஆசிரியர் திரு சி.சண்முகலிங்கம், பண்டிதர் திரு. கா. செ. நடராஜா, பண்டிதர் திரு. க. சபா. ஆனந்தர் ஆகியோரும் பெரியார் கடைப்பிடித்த கொள்கைகள் பற்றி விளக்கினார்கள். இறுதியாக இணுவையூர் என். ஆர். சின்னராசா குழுவினரின் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

# விழிப்புக் குழுக் கடமையால் மக்கள் நிம்மதி உறக்கம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரத்தைச் சேர்ந்த பெரும்பான்மையான வட்டாரப் பகுதி மக்கள், தமது இடங்களின் பாதுகாப்பைக் கருதி, பெரும்பான்மையான இடங்களுக்கு விழிப்புக் குழுக்களை அமைத்துள்ளனர்.

ஒவ்வொரு விழிப்புக் குழுவிலும் சுமார் 30 தொடக்கம் 40 வரையிலான தொண்டர்கள் வீட்டுக்கொருவர் என்ற அடிப்படையில் தத்தம் பகுதிகளை இரவில் விழித்திருந்து காவல் செய்து வருகிறார்கள்.

சுய பாதுகாப்பு இப்பொழுது இரவில் நல்லபடி அமைந்துள்ளதால் இப் பகுதி மக்கள் ஓரளவு அமைதியாக தூங்க முடிகிறது.

கல்வயல் 4-ம் வட்டாரம், மட்டுவில் வடக்கு, சங்கத்தானை 11-ம் வட்டாரம், தாமோதரம்பிள்ளை வீதி ஆகிய சகல பகுதிகளிலும் விழிப்புக் குழுக்கள் உருவாகியுள்ளன.

அந்நியர், சந்தேகத்திற்கிடமுள்ளவர்கள் வாகனங்கள் தக்க நிருபணமில்லாமல் சாவகச்சேரிப் பகுதியில் கிராமப் பகுதியில் இரவில் செல்லமுடியாதளவிற்கு இப்பொழுது நல்ல பந்தே பஸ்து ஏற்பட்டுள்ளது.

இந்த விழிப்புக் குழுக்கள் இரவு 9 மணி முதல் காலை 5 மணிவரை ரவில் முறைப்படி, முக்கிய ஸ்தானங்களிலும் வீதிகளிலும் ரோந்து காவல் புரிந்து வருகின்றன

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

திட்டங்கள் ஆலோசனையால் மட்டுமல்ல

# ஊக்குவிப்பின் மூலமே உரிய பயனைத்தர முடியும்

(பண்டத்தரிப்ப)

"எமது பிரதேச இயற்கை வளங்களையும், மூலப்பொருட்களையும் உற்பத்திப் பொருட்களாக்குவதற்கு வேண்டிய தொழிற் பயிற்சியையும், தொழில் நுட்பங்களையும் எமது இளைஞர் யுவதிகளுக்கு பயிற்றுவித்தல் எமது கடமையாகும பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலையம் யுவதிகளுக்கு தொழிற் பயிற்சியளிக்கும் கைங்கரியத்தை 1975ம்ஆண்டிலிருந்து செய்துவருவது போற்றுதற்கரிய விடயமாகும்."

இவ்வாறு யாழ் பிரதேச சிறு கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் திரு சி. ஆர். வேலாயுதம்பிள்ளை பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலைய கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

நிலையத்தின் பத்தாம் ஆண்டு நிறைவுதின விழா அருட்திரு. சி. ஜி. ஜெயக்குமார் அடிகள் தலைமையில் நடைபெற்றது.

திரு. வேலாயுதம்பிள்ளை மேலும் பேசுகையில், "நிலையத் தலைவி சங்கைக்குரிய சகோதரி யூலாலி தும்புத்தொழில், பன்னவேலை, மனையியல், தையல், தட்டெழுத்து, ஆங்கிலம், சுருக்கெழுத்து, பயிர்ச்செய்கை போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிப்பது உண்மையில் பயனுள்ள பொருளாதார வளர்ச்சிச் சேவைகளாகும். கிராமிய பொருளாதாரம் பெருக சிறந்த மகத்தான பணி இது. இதுபோல் ஆங்காங்கு பொது ஸ்தாபனங்கள் சேவையாற்ற வேண்டும். நல்ல திட்ட ஆலோசனை வழங்குவதல்ல அவற்றை செயல்முறைப்படுத்தி ஊக்கமளிப்பதே முன்மாதிரியாகும்" என்றார்.

பயிற்சியைப் பூரணப்படுத்தியவர்களுக்கான சான்றிதழ்களை திரு. சி. ஆர். வேலாயுதம்பிள்ளை வழங்கினார்

இரண்டாவது நாள் விழாவிற்கு கன்னியர் திருக்குடும்ப கன்னியர் மாகாண சபைத் தலைவி சகோதரி காமிறற், அவரது ஆலோசகர் சகோதரி சோபி, டாக்டர் அல்போன்ஸ் அத்தனுசியார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நிலையத்தலைவி தமது உரையின்போது, ஆரம்பகாலத்தில் இருந்த சகோதரி ஸ்ரெலா துரைச்சாமி நிலைய வளர்ச்சிக்கு நல்லூக்கங் காட்டினார். தொடர்ந்து அனைவரும் சமுதாய பொருளாதார மேம்பாட்டிற்கான தமது பணிக்கு மாகாணத்தலைவி உட்பட பலர் உதவியும் ஒத்தாசையும் தருவதாகவும், வட்டுலயன்ஸ் கழகம், தொழில் அதிபர் திரு. க. கனகராசா உட்பட பலர் உதவி வருவதாகவும் குறிப்பிட்டார்.

மாகாணத்தலைவி டாக்டர் அல்போன்ஸ் உட்பட பலர் உரையாற்றுகையில், கற்ற தொழில் நுட்பங்கள் சமுதாயத்திற்கு பயன்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

## உதய சிந்தனை

இன்று இங்கேயுள்ள பெரும் பாவமான காரியம் அடிமைத்தனம் ஒன்றேயாம். எல்லோரும் கட்டளையிடவே விரும்புகிறார்கள். கீழ்ப்படிய எவரும் முன்வருவதில்லை.

-விவேகானந்தர்.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23336

இதய ஒலி

16-12-85 திங்கட்கிழமை (குரோதன) மார்கழி·01

# பாரம்பரிய மண் பறிபோகும் அபாயம்

ஈழம் வாழ் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் ஒன்றான திருகோணமலையில் தொடர்ச்சியாக முழு மூச்சுடன் நடைபெற்றுவரும் தமிழர் களையெடுப்புப் பற்றி மீண்டும் குறிப்பிட வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த பத்துத் தினங்களாக அடுத்தடுத்து அங்கிருந்து வந்துகொண்டிருக்கும் செய்திகள் எந்தவகையிலும் திருப்தியளிக்கக்கூடியனவாகவில்லை,

ஊர்காவற்படையிலிருந்து சகல படைகளுமே அங்கு ஆயுதபாணிகளாக நடத்தி வரும் உத்தியோகபூர்வமான வன்செயல்கள், பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்களின் ஆசிர்வாதத்துடன் நடைபெறுமானால், அதனைத் தடுத்தாட்கொள்ளும் சக்தி எவருக்குமே கிடையாது என்பதை நாம் நன்கறிவோம்.

தமிழருக்கென்று தனியான பிரதேசம் எதுவும் கிடையாது. முழுநாடும் அனைவருக்கும் (தமிழர் உட்பட) சொந்தம் என்று பகிரங்கமாகக் கூறிக்கொண்டு, இரகஸியமாகத் திருமலையில் நடத்தப்படுவதை எத்தனை நாட்களுக்குத்தான் மறைக்கமுடியும்?

பூஸாவில் வருடக்கணக்கில் விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களை விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுவரும் இவ்வேளையில், திருமலையிலிருந்து மேலும் பல இளைஞர்கள் பூஸாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

பூஸா இளைஞர்களை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு சென்று பார்வையிட்டு வந்தபின்னர் இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறதென்றால், கண்காணிப்புக் குழு தொடர்ந்தும் இயங்க வேண்டியது அவசியம் தானா என்ற கேள்வியும் எழுகின்றது.

கடந்த மூன்று தினங்களாக கண்காணிப்புக்குழு திருமலையில் தங்கியிருந்து விசாரணைகளை நடத்தியது,

மறுபுறத்தே ஆயுதப்படையினர் தங்கள் வழமையான நடவடிக்கைகளை உக்கிரப்படுத்திக் காட்டியுள்ளனர்.

சாம்பல்தீவு, அன்புவழிபுரம், செல்வநாயகபுரம் பகுதிகளில் நூற்றுக்கும் அதிகமான இளைஞர்கள் எந்தக் காரணமுமின்றிக் கைதாகியுள்ளனர்.

இரு தமிழர்கள் வீட்டுக்கு வெளியே இழுத்து வரப்பட்டு கொலை செய்யப்பட்டபின்னர் கடையொன்றுக்குள் போடப்பட்டு தீ மூட்டி எரிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் வீட்டிலிருந்து இளம் பெண்ணொருவர் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

அதற்குச் சில தினங்களுக்கு முன்னர் நான்கு பெண்கள் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டதாக பிரஜைகள் குழுவினருக்குப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலாத்காரம் பிரயோகிக்கச் சென்ற ஒருவர், தன்னை விட்டு விடுமாறு கரங்குவித்து மன்றாடிய பெண்ணைப் பார்த்து "ஏன் நாங்கள் அழகில்லையா?" என்று கேட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"இனிமேல் புலிக்குட்டிகள் பிறக்காது; சிங்கக்குட்டிகள்தான் தமிழர் வீடுகளில் பிறக்கும்" என்றும் ஒருவர் சொன்னதாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவையெல்லாம் உண்மையானால், திருமலையிலிருந்து தமிழர்களை அடியோடு ஒழிக்கவே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவென்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

கண்காணிப்புக் குழு முன்னர் ஆஜராகி உண்மைச் சம்பவங்களை எடுத்துக்கூறும் பொதுமக்களுக்கு நாளை என்ன நடைபெறும் என்று எவருமே உத்தரவாதமளிக்க முடியாதநிலை இன்று உருவாகியுள்ளது.

தமிழ் அகதிகளுக்கு உணவு வழங்காது அவர்களைப் பட்டினிபோடும் அதே வேளையில், அவர்களது உயிருக்கே உலை வைக்கும் திட்டமிட்ட செயல்களும் நிமிடத்துக்கு நிமிடம் நடைபெற்றுவருகின்றன,

சர்வதேச ரீதியான நடுவர் குழுவொன்றை திருமலை நிலையை நேரில் பார்வையிடவைப்பதன் மூலமே சில உண்மைகளைப் பகிரங்கப்படுத்த முடியும் என்பது எமது நம்பிக்கை.

---

நவசமசமாஜக் கட்சியின் எட்டாவது ஆண்டுவிழா இன்றும் நாளையும் கொண்டாடப்படுகின்றது. இலங்கையின் சமசமாஜ அமைப்பின் பொன் விழாவும் இன்றாகும், இதனை முன்னிட்டு இச் சிறப்புக் கட்டுரை பிரசுரமாகின்றது,

# பழைய போராட்ட மரபில் எதிர்காலம் காண்போம்!

வாசுதேவ நாணயக்கார
தலைவர்
நவசமசமாஜக் கட்சி

எமது நாடு பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஆட்சியிலிருந்த காலத்தில் நகர்ப்புற தொழிலாளர் வர்க்கத்திற்கு தனக்குரிய ஸ்தாபன அமைப்பு இருக்கவில்லை. தொழிலாளி வர்க்க இயக்கம் உதயமாகியதும் அச்சகத் தொழிலாளரும் கூலி வண்டிக்காரர்களும் வேலை நிறுத்தப் போராட்டங்களில் இறங்கினர் அப்போராட்டங்களுக்கு அரசியல் தலைமைத்துவம் இல்லாதபடியால் மிதவாத முதலாளித்துவவாதிகள், தலைமை தாங்க முன்வந்தார்கள்.

1935 வரை இம் மிதவாத முதலாளித்துவ வாதிகளின் தலைமையின்கீழ் தொழிலாளர்கள் சோசலிச சமுதாய மாற்றங்களின்றி நலன் புரி நன்மைகளுக்காகவே போராடினார்கள். இக்காலகட்டத்தில் தேசிய உணர்வுகள் ஓங்கி ஏகாதிபத்திய எதிர்புத்தன்மைகள் காணப்பட்டன. படித்த மத்திய தர வகுப்பு இளைஞர்களின் தலைமையில் நடாத்தப்பட்ட "சூரிய காந்தி" இயக்கம் பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளுக்கு மேலும் ஒரு சவாலாக அமைந்தது.

சூரிய காந்தி இயக்கத்தின் தாக்கம் ஒரு ஏகாதிபத்திய வாத இயக்கம் மட்டுமல்லாமல் சாதி, மத, நிலப்பிரபுத்தவ ஒடுக்கு முறைக்கும் எதிர்ப்பான இயக்கமாக நகரங்களிலிருந்து கிராமங்களுக்கு பரவியது. இந்த இயக்கமானது மலேரியா மற்றும் தொற்று நோய்க் கொடுமையால் மக்கள் பீடிக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு, மக்களுக்கு பல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தமையால், அதற்கு மிகுந்த ஆதரவு இருந்தது. சமூக ரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் அடக்கியொடுக்கப்பட்ட பெருந்தொகையான மக்களுக்கு அவ்வியக்கம், ஒரு வரப்பிரசாதகமாயிருந்த படியால் போர்க்குணமுள்ள கிராமப்புற இளைஞர்கள் மிகுந்த உற்சாகத்துடன் இதில் நாட்டம் கொண்டார்கள். அத்துடன் நகர்ப்புற தொழிலாள வர்க்கத்திற்கும் ஒரு போராண்மைகொண்ட அரசியல் தலைமைத்துவத்தையும் கொடுத்தது. நகர்புற மத்திய தர வகுப்பைச் சேர்ந்த புத்திஜீவிகளும் இதை ஒரு தீவிரமான விடுதலை இயக்கமாக இனங்கண்டுள்ளார்கள்.

இவ்வாறுகவே சமசமாஜ இயக்கம் ஒரு தேசிய ரீதியான அரசியல் இயக்கமாக வளர்ச்சியடையத் தொடங்கியது.

1935 ல் தொழிலாளர்கள், விவசாயிகள்,கிராமப்புற பாட்டாளிகள் ஆகிய பிரிவினரைக் கொண்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமாக உதித்த இவ் இயக்கம் இன்று தனது ஐம்பதாம் ஆண்டின் நிறைவைப் பெறுகிறது. சமசமாஜ இயக்கத்தின் வரலாற்றில் எதிர்கால முன்னேற்றம் பற்றி பலதரப்பட்ட வாதப் பிரதி வாதங்கள் நடைபெற்று வந்துள்ளன. பிலிப் குணவர்த்தனவின் தலைமையின் கீழே இந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் ஒரு குறுகிய தேசிய வாத இயக்கமாகச் சிதைக்கப்பட்டது. இலங்கையிலுள்ள ஸ்ரேலின் வாதிகளும் சமசமாஜ இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றவர்களே. இன்றுவரை கூட அவர்கள் தேசிய முதாளித்துவ சக்திகளுடன் ஒத்துழைக்கவே விழைகிறார்கள். சகல தீர்க்கமான கட்டங்களிலும் அவர்கள்தேசிய முதாளித்துவத்தையும் தொழிலாளி வர்க்கத்தையும் கூட்டுச் சேர்ப்பதையே மிகமும்மரமாக செயல்படுத்தி வந்துள்ளனர்.

இப்படியாக பிளவுகள் ஏற்பட்டு சிறு சிறு குழுக்களையும் பிரிந்து சென்ற காலப்பகுதியில் இரு பிரதானமான பிரிவுகள் தோன்றின. ஒன்று அரசியலமைப்பு ரீதியான பாராளுமன்ற சீர்திருத்த நலன்புரி நடவடிக்கைகளிலும், வர்க்க போராட்ட மூலம் புரட்சிகர சமுதாய மாற்றத்தில் நம்பிக்கை வைத்தது, இதில் முதலாவது பிரிவினர் பாராளுமன்றத்தை தொழிலாளி வர்க்கப் போராட்டத்திற்குப் பக்கபலமாகப் பாவிப்பதை விட்டு, சமுதாய மாற்றத்திற்கு அதனை ஒரு கருவியாகபயன்படுத்தலாமென்ற மாயையை தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் பரப்பினர். இது அவர்களின் பெரிய துரோகச் செயலாகும்.

மேலும் குறிப்பாக 1950 களில் உலகத்தில் நிலவிய பொருளாதார வளர்ச்சி நிலை சமசமாஜ இயக்கத்தை பாராளுமன்ற சீர்திருத்தக் கொள்கைகளிருந்து மீள முடியாமல் செய்து விட்டது. சர்வதேச ரீதியான அனுபவங்களை மறந்து, தேசிய ரீதியான அனுபவங்களை மறந்து, தேசிய ரீதியான நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தப் பரிசோதனை முழு தொழிலாளி வர்க்கத்தையுமே பலவீனப் படுத்தியது. மறுபுறத்தில் பாராளுமன்ற வாதத்திற்கும் வர்க்கப் போராட்டத்திற்கும் இடையேயுள்ள எல்லையைக் கண்டு கொள்ள முடியாத சிலர் பாராளுமன்றப் பாதையை முற்றாக நிராகரித்து குழுவாதத்தைத் தழுவினர்.

புரட்சிகர பாரம்பரிய உரிமையை சுவீகரித்து போர்க்குண முள்ள தொழிலாளி வர்க்கப் போராட்டங்களை அத்திவாரமாகக் கொண்ட நவசமசமாஜக் கட்சி, வெகுஜனப் போராட்டங்களின் மூலம் ஒரு புரட்சிகர இடதுசாரி அரசாங்கத்தை இந்தநாட்டில் அமைக்கவேண்டுமென்று தீவிரமாக போராடி வருகிறது. இந்த அடிப்படையிலேயே தான் நவசமசமாஜ கட்சி தனது 8 வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் சமசமாஜ இயக்கத்தின் 50 வது ஆண்டு நிறைவையும் நினைவு கூருகிறது.

எனவே தொழிலாளி வர்க்கப் போராட்டத்தினைப் பலப்படுத்தும் அளவுக்கு பாராளுமன்றத்தை பாவிப்பது பற்றியோ, ஒரு பாராளுமன்றக் கட்சியுடன் செயல்படுவது பற்றியோ நவசமசமாஜக்கட்சிக்கு எந்தவித குழப்பமும் கிடையாது. சீர்திருத்தவாத கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் கூட்டரசாங்க அமைப்பு மூலம் சமுதாய மாற்றத்தைக் கொண்டு வர முடியுமென்றெண்ணுவது வீணாகும்,

பரந்துபட்ட மக்களின் பலத்த ஆதரவைப் பெற்றிருந்த சமசமாஜ இயக்கம் இப்படியான மாயைகளை அகற்றுவதற்கே தனதுசக்தியில்பெரும் பகுதியைச் செலவளித்து விட்டது. ஆனால் மீண்டுமொரு (மக்கள் முன்னணிக்) கூட்டரசாங்கம் அமைக்கக் கூடும். அதன் மூலம் முதலாளித்துவ வர்க்கத்தினால் தொழிலாளி வர்க்கம் கட்டுப்படுத்தப்படும்.

இத்தகைய கூட்டரசாங்கம் அமைப்பது தொழிலாளி வர்க்கம் சிந்திய இரத்தத்தினாலும் செய்த உயிர்த்தியாகங்களினாலும் பெற்ற அனுபவங்கள் எல்லாவற்றையும் மீண்டும் மறந்தே நடைபெறும்.

எனவே கடந்த ஐம்பது வருடங்களாகப் பெற்ற கசப்பான அனுபவங்களை திரும்பத் திரும்பஆராய்ந்து, சீர்திருத்தவாத கொள்கைகளினால் பலவீனப்பட்டிருக்கும் தொழிலாளி வர்க்கத்திற்குப் புத்துயிரளித்து, சிதறுண்டிருக்கும் சகல சமசமாஜிகளையும் இடதுசாரிகளையும் ஒன்றிணைப்பதன் மூலம் ஓர் புரட்சிகர இடதுசாரி அரசாங்கத்தினை அமைப்பதற்கான பாதையில் நாம் முன்னேறவேண்டும், சமசமாஜ இயக்கம் 50வது ஆண்டு நிறைவு பெறும் இவ்வேளையில் இத்தகைய திடசங்கர்ப்பம் பூண்டு செயல்படுவது ஒவ்வொரு உண்மையான சமசமாஜியின் பொறுப்பாகும்.

நவசமசமாஜக் கட்சி தனது 8வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் அதே நேரத்தில் அதன் தியாகம் நிறைந்த வர்க்கப் போராட்டங்கள் மூலம், தானே உண்மையான சமசமாஜ இயக்கமென்பதை தனதுதிறமையினாலும் திடசங்கர்ப்பத்தினாலும் நிரூபித்துவிட்டது. மேலும் பல தியாகங்களைச் செய்வதன் மூலம் சரியான பாதையில் இறுதி வெற்றியை நோக்கிச் செல்வதற்கு எம்மை மீண்டும் அர்ப்பணிப்போம்.

## இன்று திறப்பு விழா

# மகாதேவா தாம்போதி

**14 ம் திகதி ஈழமுரசு 4ம் பக்கத்தில் வெளியான மகாதேவா தாம்போதி தொடர்பான சிறப்புக் கட்டுரையின் மிகுதி இங்கு பிரசுரமாகின்றது.**

மகாதேவா தாம்போதி நிர்மாண வேலைகள் 09.11.81 அன்று சிரமதானப் பணிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. தாம்போதி வேலைகளுக்கு தேவையான கற்கள் சங்குப்பிட்டித் துறையில் இருந்து சுமார் மூன்று மைல் தொலைவிலுள்ள பரம்யன்கிராய் என்ற இடத்திலிருந்து உழவு இயந்திரங்கள் மூலமாக ஏற்றிக் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த வேலைகளில் சிரமதான இயக்கங்களும் ஈடுபட்டுவருகின்றன, இவ்வாறு 2. 7. 83 வரை சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு தொண்டாற்றிய தாபனங்களின் சகல விபரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஞானிமடம் கிராம முன்னேற்றச் சங்கம், பூநகரி (இரு தினம்) அத்தாய் கிராம முன்னேற்றச் சங்கம், பூநகரி (மூன்று தினம்) மட்டுவில் நாடு சத்தி கிராம மு. சங்கம், பூநகரி. (மூன்று தினம்) ஞானிமடம் கிராம முன்னேற்றச் சங்கம், பூநகரி (இருதினம்) பூநகரி பொது மக்கள் (ஏழு தினம்) யாழ். மாவட்ட சாரணர் (பத்துத் தினம்) நல்லூர் ப. நோ. கூ. சங்கம், (இரு தினம்) இணுவில் மஞ்சத்தடி இ. மு. சங்கம், கோண்டாவில் இரணைதீவு சன சமூக நிலையம் (இருதினம்) பூநகரி, ப. நோ. கூ. சங்கம் (இருதினம்) பரம்பன்கிராய் இளம்பரிதி கிராம இளைஞர் ஒன்றியம்; கௌதாரிமுனை கிராமோதய சபை (இரு தினம்) மன்னார் மாவட்ட பொதுமக்கள் தாபனங்கள் (இருதினம்); அறவழிப் போராட்டக் குழு, சாவகச்சேரி மட்டுவில் நாடு கிராமோதயசபை (இருதினம்); யாழ். பிரதேசசபை; வில்லடி வளர்மதி இளைஞர் அபிவிருத்திச் சங்கம்; பூநகரி நல்லூர் கிராமோதய சபை: மன்னார் தேசிய இளைஞர் சேவைமன்றம் (இரு தினம்); கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவை மன்றம் (நான்குதினம்) இலங்கை வங்கி, யாழ். மாவட்டம், பரந்தன் இளைஞர் பயிற்சி நிலையம், இலங்கை வங்கி, யாழ். மாவட்டம், பல்லவராயன்கட்டு பஸ் பிரயாணிகள் சங்கம், பூநகரி, புத்தூர் மகாத்மாஜி சனசமூக நிலையம், தோப்பு சனசமூக நிலையம், முல்லைத்தீவு தேசிய இளைஞர் சேவை மன்றம் (இருதினம்); பூநகரி நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பொன்னு வெளி கிராமோதைய சபை, தமிழ்பேசும் உபதபால் அதிபர்கள் தொழிற் சங்கம்,

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம், கிராமோதயசபை, பிரதேச சபை உறுப்பினர்கள், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, மகாதேவா தாம்போதி அமைப்பு அலுவலகம், பூநகரி, கோகிலாக்கண்டி கிராமோதய சபை, நாவற்குழி நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம், சரசாலை கிராமோதயசபை, சாவகச்சேரி, பரமன்கிராய் இளம்பரிதி கிராம இளைஞர் ஒன்றியம், பூநகரி, யாழ் மாவட்ட தேசிய இளைஞர் மன்றம்.

மகாதேவா தாம்போதி வேலைகள் சிறப்பாகவும் துரிதமாகவும் நடைபெற விரும்பிய பொதுமக்களும் தாபனங்களும் சிரமதானப்பணியில் ஈடுபட்டமையால் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான அரும் பணியாற்றப்பட்டது.

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் ஒரு பாரிய திட்டமாக விளங்கிய மகாதேவா தாம்போதி பல இன்னல்களுக்கும் இடைஞ்சல்களுக்கும் மத்தியில் முன்னாள் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு, சு. நடராசா, சபை அங்கத்தவர்கள், தொழிலாளர்கள், பொதுமக்கள் பொதுதாபனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்பினால் தாம்போதி வேலைகள் நிறைவு பெறுகிறதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம் அதேவேளையில் மிகுதியாக நிர்மாணிக்கவேண்டிய 660 அடி நீள பாலத்தையும் அமைத்து மக்கள் பூரண பலாபலன்களையும் பெற்று அபிவிருத்தியடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

---

இலங்கை நிலை: 'கியூபா' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் ராஜீவ் கவலை

# அப்பாவி மக்கள் உயிரிழப்பு; யுத்த நிறுத்தம் மீறல்!

(புதுடில்லி)

"இலங்கையில் அப்பாவி மக்கள் உயிரிழப்பது குறித்தும் சண்டை நிறுத்தம் மீறப்படுவது குறித்தும் பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி கவலை வெளியிட்டுள்ளார். 'கியூபா' சஞ்சிகையான கிரிஸ்மாவுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார்.

"இலங்கை அரசையும் தமிழர் குழுக்களையும் பேச்சு வார்த்தை நடத்தி உடன்பாடு காணச் செய்வதற்கு பாரத அரசு தன்னாலியன்றதைச் செய்து வருவதாக" அவர் சொன்னார்.

"பாரதம் பயங்கரவாதிகளின் சவாலை எதிர்கொண்டிருக்கிறது. இச்சக்திகள் மற்ற நாடுகளில் உள்ள சக்திகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன" என்றார் அவர்.



பாரதத்தின் வெளியுறவுக் கொள்கை பற்றிப் பிரஸ்தாபிக்கையில் இந்தப் பிராந்தியத்தில் ஒத்துழைப்புமிக்க அண்டைஉறவுகளைப் புதுடில்லி விரும்புவதாக திரு. காந்தி குறிப்பிட்டார்.

லத்தீன் அமெரிக்க நாடுகளுடனான பாரதத்தின் உறவுகள் தொடர்ந்து வளர்ந்து வருவதாகவும் அவர் சொன்னார்.

---

## பாக். ஆப்கானிஸ்தான் இன்று ஜெனீவாவில் சந்திப்பு

(காபூல்)

பாகிஸ்தானுக்கும், ஆப்கானிஸ்தானுக்கும் இடையே இன்று ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் கெரில்லாக்களுக்கு எதிராகப் போராடி வரும் காபூல் அரசாங்கத்திற்கு உதவிவழங்கும் சோவியத் யூனியன் நிலையில் ஏதாவது மாற்றம் ஏற்படுமா என்பது பற்றி மேற்கு நாட்டு ராஜதந்திரிகள் அவதானித்து வருவதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

## பரபரப்பான சூழ்நிலையில் இன்று அஸாம் தேர்தல்கள்

(கொஹாட்டி)

அஸாம் தேர்தல் இன்று மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் நடைபெறுகிறது.

பதினான்கு லோகசபைத் தொகுதிகளுக்கும், நூற்று இருபத்து ஐந்து சட்டசபைத் தொகுதிகளுக்கும் இங்கு தேர்தல் நடைபெறுகிறது.

ஆயிரத்து இருநூற்று முப்பத்து நான்கு வேட்பாளர் போட்டியிடுகின்றனர்.

## கனடா விமான விபத்து: கறுப்புப் பெட்டியால் பலன்?

(ஒட்டாவா)

கனடாவில் விபத்துக்குள்ளான விமானத்திலிருந்த 248 அமெரிக்க இராணுவ வீரர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இவ்விமானத்திலிருந்து மீட்கப்பட்ட கறுப்புப்பெட்டி பயன் ஏதும் தரக்கூடியதாக இல்லை என்று முன்னர் கூறப்பட்ட போதிலும் இதன்மூலம் பிரயோசனமான தகவல் பெறக்கூடியதாக உள்ளது என்று பிந்திய தகவல் தெரிவிக்கிறது.

### உங்களுடையதா?

278 B, பெரியகல்லாறு, கனகரத்தினம் இராசரத்தினம் என்பவரால் தவறவிடப்பட்ட பொருள் ஒன்று ஈழமுரசு காரியாலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## இடைத்தேர்தல்

(சென்னை)

செய்யாறு இடைத்தேர்தல் இன்று நடைபெறுகிறது. அ இ.அ.தி மு.க., தி.மு க. உட்பட சுயேச்சையாளர்களும் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டோர் இங்கு வாக்காளராக உள்ளனர்.

## கனிஷ்கா விமானவிபத்து: ரகஸிய விசாரணை நடத்த மசோதா சமர்ப்பிப்பு!

(புதுடில்லி)

ஐநூறு பேர் வரை பலி கொண்ட கனிஷ்கா விமான விபத்து தொடர்பான விசாரணைகளை இரகஸியமாக நடத்துவதற்கான சட்டவிதி திருத்த மசோதா லோகசபையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

சிவில் விமானப்போக்குவரத்துத்துறைஇணையமைச்சர் திரு. டைக்லர் இதற்கான மசோதாவை ஏற்கனவே சபையில் சமர்ப்பித்திருந்தார்.

இவ்விமான விபத்து வழக்கு கனடாவில் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.


நொதேண்

(சென். ஜோண்ஸ் கல்லூரி முன்பாக)

**A/L 86 மீட்டல்**

வகுப்புகள்

ஆரம்பம்: (**1985-12-20**)

குறிப்பு: (1) இம்முறையும் எமது நிறுவனத்தில் பல மாணவர்கள் சிறந்த பெறுபேறுகள் பெற்றுள்ளனர்.

(2) அதே ஆசிரியர்கள்


## எகிப்து—இஸ்ரேல் எல்லை தகராறு: புதிய திருப்பம்

(டெல் அவிவ்)

எகிப்துக்கும், இஸ்ரேலுக்கும் இடையே நிலவும் எல்லைப் பிணக்கு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இணக்க சபை ஒன்று உருவாக்கப்படவேண்டியதன் அவசியம் ஆராயப்பட இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மத்திய சீனாவில் 1500 கோடி டாலர் செலவில் அணுசக்தி நிலையம் அமையும்

(பீக்கிங்)

மத்திய சீனாவில் அணுசக்தி நிலையம் ஒன்றினை அமைப்பதற்கான விடயத்தில் சீனா பிரான்ஸுடன் இணக்கம் கண்டுள்ளது.

இந்நிலையம் 1500 கோடி டொலர் செலவில் அமையும் என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான உடன்பாடு சீனத் துணைப் பிரதம மந்திரி, பிரான்ஸ் தொழில் மந்திரி முன்னிலையில் எட்டப்பட்டது.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



### இளையதம்பி செல்லத்துரை

அன்னை மடியில்: 1-4-1912 ஆண்டவனடியில்: 1-12-1981

பாசமும் நேசமும் நிறைந்த மனத்தினாய் நட்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்த எமது தந்தையே நீர் மறைந்து நான்கு ஆண்டுகள் சென்றதாயினும் உமது திருவுரு என்றும் எம்மை விட்டு நீங்காது. உமது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்.

மனைவி, சகோதரர்கள், மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், பூட்டிகள்.

இல. 3, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

16 . 12 . 85 திங்கட்கிழமை

# ஈழமுரசு


இன்று ஆரம்பம்: **I. C. M. A**

**(Section A)**

ஏனைய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.

விரிவுரையாளர்கள்: V கருணாநிதி, K.P. அரவிந்தன், S.சிவபாலன் உட்பட

**RAPID RESULTS INSTITUTE,**

212, Kachcheri -- Nallur Road, JAFFNA.


சுமார் நூறு ராணுவத்தினரால் நேற்று

# நெடுங்கேணி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்; பாடசாலையில் மக்கள் தஞ்சம்; ஒருவருக்கு சூடு!

(நெடுங்கேணி)

நெடுங்கேணிப் பகுதிக்குள் சுமார் நூற்றுக்குமதிகமான ஆயுதம் தாங்கிய ராணுவத்தினர் அதிகாலை ஐந்து மணியளவில் கால்நடையாகப் புகுந்ததுடன் அங்கு துப்பாக்கிப்பிரயோகத்தையும் மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இனையடுத்து கோயில் புளியங்குளம், வெடிவைத்த கல்லு, பட்டிக்குடியிருப்பு, மருதோடை போன்ற பகுதிகளிலிருந்து பல நூற்றுக்கணக்கான மக்கள் தமது வீடுகளிலிருந்து வெளியேறி, நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

சுமார் எழுபத்தைந்து குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், குழந்தைகள் வயோதிபர்களே இதில் அனேகம் பேராவர்.

சுமார் நான்கு மணித்தியாலமாக இத்தேடுதல் வேட்டை நடைபெற்றது. சிவாநகர் பகுதியில் மக்கள் காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இளைஞர் ஒருவர் சூடுபட்டுக் காயமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது.

## கிளிநொச்சி டிப்போவில் ஒரு நாள் வேலை நிறுத்தம்

(கிளிநொச்சி)

இ. போ. ச. கிளிநொச்சி டிப்போ ஊழியர்கள் நேற்று முன்தினம் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். இதனால் கிளிநொச்சி டிப்போவைச் சேர்ந்த பஸ்கள் யாவும் சேவையிலீடுபடவில்லை.

ஊழியர்களுக்கான சம்பளம் குறிப்பிட்ட நாளில் கொடுக்கப்படாமையே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த எட்டாம் திகதி கொடுக்கப்படவேண்டிய சம்பளம் இதுவரை கொடுக்கப்படாததால் தாங்கள் மிகுந்த கஷ்ட நிலைக்கு ஆளாக்கப்படுவதாக மேற்படி ஊழியர்கள் தெரிவித்தனர். இதனால் கிளிநொச்சிப் பிரயாணிகள் தங்கள் பிரயாணத்தை மேற்கொள்ள மிகுந்த சிரமப்படவேண்டியிருந்தது.

## சூரன் போரும் அன்னதானமும்

நல்லூர் தெற்கு, ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் இன்று மாலை ஐந்து மணியளவில் சூரன்போர் திருவிழா நடைபெறும். நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் அன்னதானம் வழங்கப்படும்.

## மின்சாரம் இல்லை

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை உப அலுவலகத்துக்குட்பட்ட மாவிட்டபுரம் புகையிரத நிலையத்துக் கருகாமையில் உள்ள நிரந்தர மின்பாவனை வீட்டுக்காரர்கள் மின்சாரம் இன்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

## கண்காணிப்பு குழு நேற்று மூதூர் விஜயம்; சிவத்தம்பி திருமலைக்குச் செல்லவில்லை

(திருமலை)

திருமலைக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு இறுதி நாளான நேற்று மூதூர் பொலிஸ் நிலையத்திற்கு விஜயம் செய்தது.

ஏற்கனவே சாட்சியமளித்த சிலரது குற்றச்சாட்டுக்கள் பற்றி குழுவினர் இங்கு மேலதிக விபரங்களைப் பெற்றதாகத் தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் விசாரணையின்போது குழுமுன் ஆஜரான நான்கு குடும்பப் பெண்கள் தங்கள் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டது பற்றி விபரித்துக் கூறினர்.

இவர்களில் இருவர் தங்கள் கணவர்மார் கொலை செய்யப்பட்ட பின்னர், கடையொன்றுக்குள் போடப்பட்டு தீ மூட்டி எரிக்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

சீருடையினரின் தாக்குதலுக்குள்ளானதாகக் கூறப்படும் எட்டுப் பேர் நேற்று முன்தினம் விசாரணையில் ஆஜராகி சாட்சியமளித்தனர். குழு உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் கா. சிவத்தம்பி திருமலைக்குச் செல்லவில்லை.

## மூன்று ஆண்டுகள் முடிந்தும் பெறுபேறுகள் வரவில்லை

(நீர்வேலி)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1981ஆம் - 1982ஆம் ஆண்டுகளில் பயிற்சி முடிந்து வெளியேறிய விவசாயம், உடற்கல்வி, கைவினை, ஆங்கிலம் ஆகிய நெறிகளைச் சேர்ந்தவர்களது பெறுபேறுகளைத் தவிர்த்து நாடு பூராவும் ஏனைய நெறிகளின் பெறுபேறுகள் வெளியாகி இரண்டு மாதங்களாகின்றன.

இதேவேளை அவர்களுக்குப் பின் பயிற்சி பெற்ற 1982ஆம் - 1983ஆம் ஆண்டு காலப் பகுதியினருக்கும் சென்ற வாரம் முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற் குறிப்பிட்ட விடயத்தில் சம்பந்தப்பட்ட கலாசாலையும் பரீட்சைத் திணைக்களமும் உரிய நடவடிக்கையை விரைவாக மேற்கொண்டு விரக்தியுறும் ஆசிரியர்களுக்கு விமோசனம் அளிக்க முன்வரவேண்டும் என பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் ஆசிரியர்கள் மிகவும் மனவேதனையுடன் தெரிவித்தனர்.

## போட்டி ரத்து

(அரியாலை)

யாழ். உதை பந்தாட்டச் சங்கம் அரியாலை சன சமூக நிலைய மைதானத்தில நடத்தி வந்த 7 பேர் கொண்ட விலகல் முறை உதை பந்தாட்டப் போட்டி நேற்று இம் மைதானத்தில் நடைபெறவில்லை. முன்னறிவிப்பின்றித் திடீரென இம் மாற்றம் செய்யப்பட்டதால் நேற்று விளையாடவிருந்த அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் பீ' பிரிவு போட்டியில் பங்குபற்றவில்லை.

### வங்கி ...

சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சுடனும், கண்காணிப்பு குழு விடமும் தொடர்பு கொண்டது ஆகிய காரணங்களாலேயே அந்த போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள விநியோகமுறை அடகு வைத்து இன்னும் பணம் செலுத்தாத வாடிக்கையாளர்களை மேலும் பணம் செலுத்த தூண்டும் ஓர் நடவடிக்கையாக இருப்பதால், இவர்களை நகை மீட்புக்கென வங்கிகளில் பணம் செலுத்த வேண்டாம் என சங்கம் வலியுறுத்திக் கேட்கிறது, இந்த விநியோகத்துக்கு பின்னர் தினம் அறுபது நகைகள், இதுவரை பணம் செலுத்தியவர்கள் எதிர் நோக்க வேண்டிய புதிய பிரச்சினைகளுக்கும் இச் சங்கம் பொறுப்பல்ல எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விநியோக முறையின் கீழ் பணம் செலுத்திய நகைகள் பத்தாயிரமும் முழுவதும் கொடுத்து முடிய மூன்றரை வருடங்களாகும். மொத்தமான எண்பதினாயிரம் நகைகளும் கொடுத்து முடிய இருபத்தைந்து வருடங்கள் எடுக்கும் என்பதையும் வாடிக்கையாளரின் கவனத்துக்கு சங்கம் கொண்டு வருவதுடன் இந்த விநியோக முறை வாடிக்கையாளர்களை பணம் செலுத்த தூண்டும் ஒரு திட்டமிட்ட சதி எனவும் அறிவித்துள்ளது.

### ராணுவம்...

1 ம் பக்கத் தொடர்

படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட க. மனோகரராசாவின் இறுதிச் சடங்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை தீராத சோகத்துடன் ஜெபம் கூறிக் கொண்டிருந்த அவரது மனைவி மனோகரராசா செல்வராணி (34) மாரடைப்பினால் மரணமானார்.

ஒரு குழந்தைக்குத் தாயான இவர் இறக்கும் போது நான்கு மாத கர்ப்பிணி என்பதும் குறிப்பிடத்தக்கது.

### தமிழாசிரியர்கள்...

...1-ம் பக்கத் தொடர்

சந்தியில் திருமலை பஸ்ஸில் ஏறும்போது சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டனராம்.

இவர்கள் கட்டைபறிச்சான் பாடசாலையொன்றில் பணிபுரிபவர்களாவர்.

### கோட்டை....

தாக தெரிகிறது. இவரது சடலம் உடனடியாக அங்கிருந்து மற்றைய இளைஞர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.

### தனியார் ...

ஏற்புடையதல்ல. எனவே இதனை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடுவதே நல்லது என்று இங்கு உரையாற்றிய ஈழ மாணவர் பொது மன்றத்தின் பிரதிநிதி தெரிவித்தார்.

இத் தனியார் மருத்துவக் கல்லூரியை புனரமைத்து இயங்கச் செய்யலாம் என்ற கருத்தையும் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் இங்கு கருத்துத் தெரிவிக்கையில், தனியார் மருத்துவக் கல்லூரி அமைப்பாளர்கள் தமிழ் மாணவர்களின் நன்மைகருதியும், சேவை மனப்பான்மையுடனும் தான் இதனை ஏற்படுத்துவதாகக் கூறியுள்ளார்கள். ஆனால் இன்று எமது மருத்துவ பீடத்தில் பல பிரச்சினைகள் உள்ளன.

முதலாவதாக இங்கு விரிவுரையாளர்கள் பற்றாக்குறையாக உள்ளது. இந்நிலையில் தனியார் கல்லூரிக்கு விரிவுரை நிகழ்த்தச் செல்பவர்கள் இங்கு விரிவுரையாளராகக் கடமையாற்ற முன்வருவதில்லை.

இன அடிப்படையிலோ மாவட்ட அடிப்படையிலோ தரப்படுத்தல் இடம்பெறுவது போல் இங்கு பண அடிப்படையில் தரப்படுத்தல் மேற்கொள்ளப்படுகிறது.

இதனால் பணமுள்ள பல மாணவர்கள் படிக்காவிட்டாலும் கூட அனுமதி கிடைக்கும் என்பதால் அவர்களிடையே முயற்சி, திறமை ஆகியன பாதிக்கப்படும்.

யாழ். வைத்தியசாலையில் இப்பொழுது நிபுணர்கள் எமக்கு பயிற்சியளிப்பதற்குப் போதாத நிலையிலேயே உள்ளது. இந் நிலையில் தனியார் மருத்துவக் கல்லூரி எங்கிருந்து நிபுணர்களை எடுக்கப் போகிறார்கள் என்பது ஒரு பிரச்சினையாகவே இருக்கும். அவர்கள் எமக்குப் பயிற்சியளிக்கும் நிபுணர்களைத்தான் பிரித்து எடுக்க வேண்டியிருக்கும், இதனால் எமது கல்வி பெரிதும் பாதிக்கப்படலாம்.

ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி, றொட்டறிக் கழகம் மற்றும் சில நிறுவனங்களும் இவ்வாறான தனியார் மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்க முன்னர் திட்டமிட்ட போதிலும் இது பற்றிய பிரதி கூலங்களை நாம் அவர்களுக்கு தெளிவுபடுத்தியதால் அவர்கள் அதனைக் கைவிட்டுவிட்டார்கள் என்று தெரிவித்தார்கள்.

பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் சார்பில் பேசிய பிரதிநிதி, தனியார் மருத்துவக் கல்லூரியை இன்றுள்ள நிலையில் இயங்க விடக்கூடாது தான். அதற்காக அதனை முற்றாகத் தடை செய்ய வேண்டியதும் இல்லை. இதில் சில சீர் திருத்தங்களை அல்லது மாற்றங்களைச் செய்வதன் மூலம் இயங்கச் செய்யலாம்.

பண அடிப்படையில் இயங்குகின்ற இன்றைய நிலையை மாற்றி தகுதி அடிப்படையில் இதனை இயங்கச்செய்ய வேண்டும் என்றார்.

தனியார் மருத்துவக் கல்லூரி அமைப்பாளர்களுக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும் அவர்கள் இதில் கலந்து கொள்ளவில்லை. அவர்களும் கலந்து கொண்டிருந்தால் அவர்கள் தரப்பு நியாயங்களையும் இங்கு முன் வைத்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது,

### 1796 ...

மாறி அமைந்திருந்தது. இதனால் பரீட்சார்த்திகள் பெரும் மயக்கத்துக்கு உள்ளானார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

### கட்டை....

தாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

சம்பூர் பகுதிகளில் நேற்று முழுநாளும் வெடிச் சத்தம் கேட்டதாகவும், எவரும் அங்கு செல்லவோ. அல்லது வெளியே வரவோ முடியவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

### கூட்டணியினரின்....

வாக்க வேண்டுமென்று கூட்டணியினர் தமது மாற்று யோசனையாகத் தெரிவித்திருந்தனர்.

இது சம்பந்தமான இலங்கையின் நிலைப்பாட்டைத் தெரிந்த பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி இந்திய அரசு தீர்மானிக்குமெனவும் தெரியவந்துள்ளது.

### இலங்கை...

மரணதண்டனை விதிக்கப்பட்டது. இவர் கடந்த மார்ச் மாதம் கெய்ரோ விமான நிலையத்தில் மூன்று கிலோ போதை வஸ்து கடத்திய குற்றச்சாட்டின் பேரில் விசாரணை நடைபெற்று இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது. இவரது பெயர் விபரங்கள் அறிவிக்கப்படவில்லை.


"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 87, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 16-12-1985 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336